# பக்தி இலக்கியங்களில்

# தமிழ் வளர்ச்சி

(கட்டுரைத் தொகுப்பு)


பதிப்பாசிரியர்

முனைவர் சே. திருநாவுக்கரசு

தொகுப்பாசிரியர்

முனைவர் ஏ. கோதண்டராமன்



அகல் பதிப்பகம்

18. சைவ வைணவத்தில் அறிவியல் சிந்தனைகள்
- **ச.இராதாகிருஷ்ணன்** ........................................ 134

19. திருமந்திரத்தில் காணலாகும் உடல் மீதான கருத்தாக்கங்கள்
- **முனைவர் ச. பிரபாகரன்** ........................................ 144

20. தமிழ் வளர்ச்சியில் ஐரோப்பியரின் பங்களிப்பு
- **முனைவர் மோ.கிறிஸ்டி** ........................................ 149

21. வள்ளலாரின் இறைவழிபாடும், தமிழ்ப்பணியும்
- **முனைவர் ம. அருள்தாஸ்** ........................................ 157

22. இசுலாமிய பக்தி இலக்கியத் தமிழ் வளர்ச்சியில் மாலைகள் - பல்சந்தமும் மிகுராசு மாலையும் - **முனைவர் பா. மொய்தீன் ஆரிப்** ........ 163

23. நாலாயிர திவ்விய பிரபந்தத்தில் தமிழ்ப் பயன்பாடு
- **முனைவர் மு. காமராஜ்** ........................................ 169

24. ஞானத்தமிழ் வளர்த்த ஞானசம்பந்தர் **முனைவர் கி. அன்பு** ........ 174

25. இஸ்லாமிய தமிழ் இலக்கிய முன்னேற்றத்தில் இஸ்லாமிய இலக்கிய கழக மாநாடுகளின் பங்களிப்பு -**முனைவர் மு.முஹம்மது ரஃபீக்** 183

26. சைவ இலக்கியங்கள் - **எஸ்.கலா** ........................................ 192

27. மக்களின் செல்வாக்கைப் பெற்றதா? கந்தபுராணம்
- **முனைவர் பொன் சண்முகம்** ........................................ 199

28. நம்மாழ்வாரின் நான்மறைகள் **முனைவர் த. ராதிகா லட்சுமி** ...... 204

29. சைவ இலக்கியமும் தமிழ் வளர்ச்சியும் - **பா. மோகனா** ............... 211

30. ஆண்டாளின் இறையும் இலக்கியப்பணியும் - **அ. நித்தியபாலா** .... 216

31. பெரியபுராணமும் இறைச் சிந்தனைகளும்
- **திருமதி. மு.கார்த்திகா** ........................................ 223

32. தமிழ் காப்பியங்களில் பௌத்தம் - **சே. செண்பகம்** ............... 231

33. இரட்சணிய யாத்திரிகத்தில் தற்குறிப்பேற்ற அணி
- **அ.அருண்குமார்** ........................................ 239

34. அருள்மிகு மாசாணியம்மன் வரலாறும் வழிபாடும்
- **முனைவர் மு. இராதா** ........................................ 247

35. சைவம் வெளிப்படுத்தும் இறையன்பு
- **முனைவர் கே.எஸ்.பிரணதார்த்திஹரன்** ........................................ 254

36. சைவ சமயமும் சிவ வடிவங்களும் - **முனைவர் கி. அன்பு** ............ 260

37. சிவவாக்கியரின் இறை வழிபாட்டுச் சிந்தனை
- **முனைவர் மு. முஸ்தபா** ........................................ 271

# நம்மாழ்வாரின் நான்மறைகள்

**முனைவர் த.ராதிகா லட்சுமி,**
இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை,
நல்லமுத்துக் கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி,
பொள்ளாச்சி-642001

ஆழ்வார்களில் முதன்மையானவராகவும், மிகச்சிறந்தவராகவும் திகழ்பவர் நம்மாழ்வார் என்பதில் கருத்து வேறுபாடு இருக்க இயலாது. நம்மாழ்வார் பிரமாதியாண்டு வைகாசி திங்கள் 12ஆம் நாள் வளர்பிறையில், பௌர்ணமி திதியில், வெள்ளிக்கிழமை அன்று விசாக நட்சத்திரத்தில் அவதரித்தவர். மாறன் காரி, உடைய நங்கையாருக்குப் பிறந்த நம்மாழ்வாருக்குப் பெற்றோர் பாட்டனாரின் பெயரான 'மாறன்' என்ற பெயரை இட்டனர். இவருடைய மற்ற பெயர்கள் சடகோபன், பராங்குசன் போன்றவை. சடம் என்றால் 'வாயு' என்று பொருள். காற்று முதலில் குழந்தையைச் சூழ்ந்துக் கொள்ளும்போது குழந்தை அழும். ஆனால் நம்மாழ்வார் பிறந்த பொழுது அவர் அழவே இல்லை. அதாவது சடம் என்னும் வாயுவை முறித்ததனால் ஒரு சடகோபன் என்ற பெயர் ஏற்பட்டது. பக்தி என்கின்ற அங்குசத்தால் எம்பெருமானை வசப்படுத்தினால் பராங்குசன் என்ற பெயர் தோன்றியிருக்கலாம். நம்மாழ்வாரை 'அவயவி' எனவும் ஏனைய ஆழ்வார்களை இவருக்கு 'அவயவங்கள்' என்றும் உரைப்பர்.

நம்மாழ்வாருக்குத் திருமுடியாக பூதத்தாழ்வாரும், திருக்கண்களாகப் பொய்கையாழ்வார், பேயாழ்வார் ஆகிய இருவரையும், திருமுகமாகப் பெரியாழ்வாரும், திருக்கழுத்தாகத் திருமழிசை ஆழ்வாரும், திருக்கைகளாக குலசேகர ஆழ்வாரும், திருப்பாணாழ்வாரையும், திருமார்பாகத் தொண்டரடிப் பொடியாரையும், கொப்பூழாகத் திருமங்கை மன்னனையும் திருவடியாக மதுர கவியாழ்வாரும் கூறப் பெற்றனர்.

இராமவதாரம் முடிவதற்கு மூன்று நாட்களுக்கு முன்பு இராமனிடம் ஒரு ரகசியத்தைத் தெரிவிக்க எமதர்மராஜன் வந்த

பொழுது அந்தரங்கக் காவலனாக இலக்குவனை வெளியே நிறுத்துகின்றனர் . அப்போது கோபக்காரரான துர்வாச முனிவர் வந்ததால் 'எங்கே இவரை தடுத்து நிறுத்தினால் இவர் கோபத்தில் இராமனுக்கோ அயோத்திக்கோ சாபம் கொடுத்து தீங்கு நேர்ந்துவிடப் போகிறது' என்று அஞ்சினான் இலக்குவன். அதனால் அவரை அமரச் சொல்லிவிட்டு இராமரிடம் சென்று தகவலைக் கூறினான். தன் கட்டளையை மீறி இலக்குவன் உள்ளே வந்ததால் கோபம் கொண்ட இராமன் இலக்குவனை மரமாக இருக்குமாறு சபித்துவிட்டான். தங்களைவிட்டுத் தன்னால் பிரிந்து இருக்க முடியாது என்று அழுத இலக்குவனை, இராமன் தழுவியவாறு தான் சீதா தேவியைக் காட்டில் வாழ செய்த பாவத்தைப் போக்குவதற்காக 16 ஆண்டுகள் அசையாத பிம்பமாகப் பிறக்க வேண்டி உள்ளது என்றார். அப்போதுதான் இலக்குவன் மடியில் அமர்ந்து கொள்ள ஆசைப்பட்டு அவனை மரமாகும் படி சபித்ததாகவும் உரைத்தார்.

இராமன், தான் நம்மாழ்வார் என்ற பெயரில் அவதரிப்ப தாகவும் அப்போது அங்கு ஆதிநாதன் கோயில் புளியமரமாக அவதரிக்கும் இலக்குவன் மடியில் இளைப்பாறுவதாகவும் கூறினார். இதன்படி இலக்குவன் திருநகரி என்ற இடத்தில் புளியமரமாக நிற்க இராமன் நம்மாழ்வராக அவதரித்ததாக உரைப்பர் .

நம்மாழ்வார் அவதாரத்தைக் குறித்து மற்றொரு கதையும் கூறப்படுகின்றது. திருமாலே நம்மாழ்வாராக பூமியில் அவதாரம் செய்வதற்கு முன் தனது வாகனமான கருடனையும், தனது படுக்கையான ஆதிசேஷனையும் அழைத்து தனக்கு முன்னால் பிறக்கும்படி உரைத்தாராம். அதன்படியே ஆதிசேஷன் புளியமரமாக, ஆழ்வார் திருநகரியிலும், கருடாழ்வார் திருக்கோளூர் மதுரக்கவி ஆழ்வாராகவும் பிறந்தததாகவும் உரைப்பர்.

நம்மாழ்வாரின் அருளிச் செயல்களான திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி, திருவாய் மொழி என்னும் நான்கு நூல்களை நான்கு வேதங்களாகக் கொள்வது மரபு. திருவிருத்தத்தை ரிக் வேதம் என்றும், திருவாசிரியத்தை யசூர் வேதம் என்றும், பெரிய திருவந்தாதியை அதர்வண வேதம் என்றும், திருவாய்மொழியைச் சாம வேதம் என்றும் உரைப்பர். நாலாயிர

திவ்வியப் பிரபந்தத்தில் நம்மாழ்வாரின் முதல் மூன்று பிரபந்தங்கள் இயற்பாத் தொகுதியிலும், திருவாய்மொழி இசைப்பா தொகுதியிலும் அமைந்துள்ளது.

திருவிருத்தம் உலகக்கட்டிலிருந்து விடுபடுவதற்கான 100 பாசுரங்களைக் கொண்டது. அகத்துறையைச் சார்ந்த இந்நூல் கடினமான கட்டளை கலித்துறையாலானது. தலைவன், தலைவி, பிரிவு என்னும் அகநிலையைக் கடந்து ஆழ்வார்க்கும், அடியார்க்கும் உள்ள உறவுகளை அகக்கண்ணால் பார்க்கக் கூடியது.

"சின்மொழி நோயோ கழிபெரும் தெய்வம்
இந்நோயினதென்று
இன்மொழி கேட்கும் இளம்தெய்வம் அன்று"
- (நாலாயிர திவ்வியப் பிரபந்தம் பா.எ.2497)

'பிரிவுத்துயரில் வாடிய தலைவியின் நோய்க்குக் காரணம் திருமால் மேற்கொண்ட காதலே. அதனால் பிரளயக் காலத்தில் உலகை தன் வயிற்றில் வைத்தவனின் பெயர் உரைத்து அவன் சூட்டிய மாலையை இவளுக்குச் சூட்டுங்கள். நோய் தீரும்' என்பதில் உலக மக்கள் எம்பெருமானையே கருத்தில் கொள்ள வேண்டும் என்று நம்மாழ்வார் வலியுறுத்துவதை உணர முடிகிறது.

எம்பெருமானின் நற்குணங்களில் பரமானந்தம் பெருக அனுபவித்துப் பாடியது திருவாசிரியம் ஆகும்.

"........யாவகை
உலகமும் யாவரும் இல்லா மேல்வரும்
பெரும்பாழ்க் காலத்து இரும் பொருட்கெல்லாம்
அரும்பெறல் தனிவித்து ஒரு தான் ஆகித்
தெய்வ நான்முகக் கொழுமுளை ஈன்று
முக்கண் ஈசனோடு தேவுபல நுதலி
மூவுலகம் விளைத்த உந்தி
மாயக்கடவுள் மா முதல் அடியே"
- (நாலாயிர திவ்வியப் பிரபந்தம் பா.எ.2581)

எந்த வகையான உலகமும், உயிரினமும் இல்லாத அந்தப் பெரிய பாழ்க் காலத்தில் பொருட்களுக்கு எல்லாம் வித்தாக ஒரே ஒரு 'தான்' ஆகி பிரம்மனையும், முக்கண் உடைய ஈசனையும்,

தேவர்களையும் கொண்டு வந்து மூன்று உலகங்களையும் உருவாக்கிய மாயக் கடவுளான திருமாலின் முதல் அடி என்று பெருமாளின் தன்மையை நம்மாழ்வார் குறிப்பிடுகிறார். மேலும் பிரம்மன், இந்திரன் முதலான தேவர்களும், அனைத்து உலகங்களும், நிலம், நீர், நெருப்பு, காற்று, சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள் என அனைத்திலும் விதிவிலக்கு இன்றி மறைந்து விரவியிருக்கும் ஆலிலை மேல் உறங்கும் தெய்வமான திருமால் அல்லது வேறு தெய்வம் எங்களுக்கு உண்டோ? என்று பாடியதில் திருமாலே தெய்வம் என நம்மாழ்வார் வலியுறுத்துகிறார்.

பெரிய திருவந்தாதி பரமானந்தத்தை அனுபவிக்க நம்மாழ்வார் தன் நெஞ்சுடன் பேசும் 87 பாசுரங்களைக் கொண்டது.

“பெற்றதாய் நீயே பிறப்பித்த தந்தை நீ
மற்றையார் ஆவாரும் நீ”
- (நாலாயிர திவ்வியப் பிரபந்தம் பா.எ.2589)

என்ற பாசுரம் எம்பெருமானே அனைத்தும், யாவரும் என்று வசிஷ்டாத்வைதத்தின் மையக்கருத்தை விளக்குகிறது.

திருவாய்மொழி த்வயமந்திரத்தின் பொருளையும், அர்த்த பஞ்சகத்தையும் விளக்குவதாகக் குறிப்பிடுவர். எம்பெருமான் கல்யாணக் குணங்களை உடையவன். உடலில் உயிர் இருப்பது போல் உலகில் அனைத்துப் பொருட்களிலும் நீக்கமற நிறைந்திருப்பவன் இறைவன். இத்தகையவனின் தாளைத் தொழுது இவ்வுலகப் பந்தத்தை ஒழிக்கும்படி நம்மாழ்வார் அறிவுரைக்கிறார். திருவாய்மொழியின் முதல் பாசுரமே 'சரணாகதி' தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டது.

“உயர் வற உயர்நல முடையவன் யவனவன்
மயற்வர மதிநலம் அருளினன் யாவனவன்
அயர்வறும் அமரர்கள் அதிபதி யவனவன்
துயரறு சுடரடி தொழுதெழுன் மனனே”
- (நாலாயிர திவ்வியப் பிரபந்தம் பா.எ.2899)

நம்மாழ்வார் எம்பெருமானின் கல்யாணக் குணங்களை 19 வகையான 'சரணாகதி கத்யத்தில்' வகைப்படுத்தி காட்டுகிறார். அவை 1. சௌசீல்யம் 2. வாத்ஸல்யம் 3. மார்த்தவம் 4. ஆர்ஜவம் 5. சௌகார்த்தம் 6. சாம்யம் 7. காருண்யம் 8. மாதுர்யம் 9.

காம்பீர்யம், 10. ஔதார்யம் 11. சாதுர்யம் 12. ஸ்தைர்யம் 13. தைரியம் 14. சௌர்யம் 15. பராக்கிரமம் 16. சத்திய காமத்வம் 17. சத்ய சங்கல்பத்வம் 18. கிருதித்வம் 19. க்ருதஜ்ஞத்வம் ஆகியவை. குணங்கள் முறையே பெரியவன், சிறியவன் என்ற பேதமின்றி அடியார்களிடம் ஒன்றாக இணையும் குணம், அடியவர்களின் குற்றங்களையே தனக்கு உவப்பாக கொள்ளும் குணம், அடியவர்களின் பிரிவைப் பொறுக்க முடியாது இருத்தல், மனம், வாக்கு, காயங்களில் மாசுபடாமல் இருக்கும் குணம், எப்போதும் யாவருக்கும் நன்மையே எண்ணும் குணம், உயர்வு, தாழ்வு கருதாது அனைவரும் சரணடையத் தக்கவனாய் இருக்கும் பண்பு, துன்பப்படுபவர்களைக் கண்டு இரங்கும் பண்பு தன்னை கொல்ல நினைக்கும் பகைவருக்கும் இனியவனாக இருத்தல், தன்னைச் சரணடைந்த அடியார்க்கு வரமளிக்கும் தன்மையை யாராலும் யூகிக்க முடியாத நிலை, அடியவருக்கு வேண்டுவதெல்லாம் தரும் தன்மை, பகைவரையும் நண்பராக்கிக் கொள்ளவல்ல சாமர்த்தியம், அடியவர்களை ஒருபோதும் கைவிடாத உறுதி, பகைவர்களை அழிக்கும் வல்லமை, வலிய பகைவர்களிடையேயும் ஒரு துணையும் இன்றி புகும் ஆற்றல், போர்க்களத்தில் பகைவர்களை அழிக்கும் ஆற்றல், விரும்பியதை குறைவறப் பெற்றிருத்தல், எச்செயலையும் தடையின்றி செய்து முடிக்கும் திறன், அடியாருக்காக எப்பொழுதும் செயலில் ஈடுபட்டிருத்தல், அடியார்கள் சிறுநன்மை செய்யினும் எப்போதும் மறக்காத குணம் எனப் பொருள்படும்.

இக்கல்யாணக் குணங்கள் ஞானம், பலம், ஐஸ்வரியம், சக்தி போன்றவற்றிலிருந்து தோன்றுகின்றது. இயன்ற அளவு சில குணங்களாவது மனிதர்கள் பெறவேண்டும் என்ற நோக்கமே இக்கல்யாணக் குணங்களுக்கு அடிப்படையாக இருக்க வேண்டும். இறைவனின் தன்மைகள் குறித்து முழுமையாய் கூற முடியாதபடி உயர்நலம் உடையவனாய், மயக்கம் இன்றி இறைவனைப் பற்றி அறிந்து கொள்ள நல்லறிவைத் தந்தவனாய், அமரர்கள் போற்றும் அதிபதியாகவும் உள்ள எம்பெருமானின் குணநலன்களையே இந்த 19 கல்யாணக் குணங்களின் வாயிலாக உணர முடிகிறது. பாசுரத்தின் இறுதி அடியில் இறைவனின் தாள்களை வணங்கும் மனம் சரணாகதி அடைய வேண்டிய நிலையை வலியுறுத்துகிறது. மனிதர்கள் மோட்சம் அடைய தன் விருப்பத்திற்கிணங்க பெருமாளை

நோக்கி செய்யும் செயல் பக்தி எனப்படும். ஆனால், தான் விரும்பியதைத் தன்னால் நிறைவேற்ற இயலாத போது அதை நிறைவேற்றுவதற்குப் பகவானிடம் 'நீயே உபாயமாக வேண்டும்' என்று நம்பிக்கையோடு வேண்டுவதே பிரபத்தி மார்க்கம். அதாவது சரணாகதி நிலையாகும்.

> **"'சரணாகதி' என்பது, இறைவனுக்கு அனுகூலமான செயலைச் செய்வது; இறைவனுக்கு விரோதமாக இராமை; இறைவன் தன்னை நிச்சயம் காப்பாற்றுவான் என்ற நம்பிக்கை; இறைவனைத் தனக்கு இரட்சகனாக இருக்க வேண்டிப் பிரார்த்திப்பது; 'என்னைக் காத்துக் கொள்ள என்னிடம் ஆற்றல் இல்லை நீயே என்னை காத்தல் வேண்டும்' என்று சரணாகதி அடைதல் ஆகிய ஐந்து குணங்கள் பிரபத்தி மார்க்கத்திற்கு நிலைக்களனாகக் கொள்ளப்படுகின்றன"**
>
> - (தேவராஜன் - வைணவமும் ஆழ்வார்களும் ப.எ-360)

என்ற தேவராஜனின் கருத்து இங்கு ஒப்பு நோக்கத்தக்கது. இந்த பிரபத்தி மார்க்கத்தின் அடிப்படையிலேயே நம்மாழ்வாரும் எம்பெருமானிடம் சரணாகதி அடைந்து, அவனது சுடரடி தொழுது, துயரம் விலகி பரமபதம் அடையலாம் என்று அடியவர்களுக்கு அறிவுரைக்கிறார்.

உலகக்கட்டிலிருந்து விடுபடுவதற்கான வழிகளைத் திருவிருத்தமும், இறைவனின் குணங்களில் ஆழ்ந்து ஆனந்தம் பொங்க அனுபவித்துப் பாடுதலைத் திருவாசிவாயமும், பரமானந்தத்தை அனுபவிக்கும் ஆசைப் பெருக்கத்தை வெளிப்படுத்தும் பொய திருவந்தாதியும், இறைவனே அடியார்களுக்கு அருளிய செந்தமிழ் வேதமெனப் போற்றப்படும் திருவாய்மொழி என்னும் நம்மாழ்வார்ன் அருளிச் செயல்கள் பெருமைக்குயது. ஜீவாத்மா தன் மாயப் பந்தங்களை அறுத்து பரமாத்வை அடைவதற்கு நம்மாழ்வார் பிரபத்தி நெறியையே சிறந்ததாக வலியுறுத்துகிறார். மக்களுக்காய்ப் பாடி வந்த அகப்பொருள் துறைகளை மாற்றி அவற்றை உத்தமரானப் பெருமாளுக்குக் காதல் பெருகப் பாடியவருள் நம்மாழ்வார்

குறிப்பிடத்தக்கவார். இறைவனை அடைவதற்கான வழியாகச் சரணாகதித் தத்துவத்தை எடுத்துரைக்கிறார்.

**பார்வை நூல்கள்**


- முனைவர். கமலக்கண்ணன் - நாலாயிர திவ்வியப் பிரபந்தம், வர்த்தமானன் பதிப்பகம், சென்னை. முதல்பதிப்பு 2001
- சுஜாதா - ஆழ்வார்கள் ஓர் எளிய அறிமுகம், விசா பப்ளிகேஷன்ஸ், சென்னை, நான்காம் பதிப்பு 2007
- தேவராஜன் - வைணவமும் ஆழ்வார்களும், ஸ்ரீ செண்பகா பதிப்பகம், சென்னை. இரண்டாம் பதிப்பு 2009
- ராமநாதன். அரு - பன்னிரு ஆழ்வார்கள் கதைகள் (ப.ஆ), பிரேமா பிரசுரம், சென்னை, பதினாறாம் பதிப்பு 2013